**வருகின்ற 2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)**
**பவானி நகராட்சி**

1) இந்நகராட்சியில் SRP 2020-21 திட்டத்தின்கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் Providing and Restoration of Bitumen road and Cement Concrete road at Chokkaramman Nagar, Anna Nagar (Mayura complex ),Gurunathan road,Anthiyur road,Devaraj pillai lane,Sivagnam lane,Thiruneelagander street, Makkan street, and Cauvery street in ward No. 1,3,5,8,14,15,24 and 27 பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20557/E3/2020 நாள்:15.12.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line -ல் மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன்அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 20.01.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ ( இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர். செம்பாகவுண்டர், கொங்கனாபுரம் | 100.00 | 4.93% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |
| 2 | திரு. ஆர்.முத்துசாமி & கோ படை வீடு திருச்செங்கோடு | | 7.03% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 4.93% சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு.ஆர்.செம்பாகவுண்டர் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 20.01.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செம்பாகவுண்டர், தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 12.01.2021 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 4.93% சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து தர இயலாது என 21.01.2021 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள். ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செம்பாகவுண்டர், அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.93% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.93% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திரு.ஆர்.செம்பாகவுண்டர், அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி -1 பாகம் 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவித்தை 4.93 % சதவீதம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1359/2020/இ1)

2. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அலுவலகத்திற்கு 100AH திறனுடைய பேட்டரிகள் 5 எண்கள் சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.70000/- இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 225/நாள். 31.12.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 21.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர் .குரு எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், ஈரோடு. | 0.14 % | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் ஸ்ரீ வேல் எலக்ட்ரிக்கல்ஸ், ஈரோடு. | 1.43% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.14 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் குரு.எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1677/2020/இ1)

**இடம்: பவானி**

**நாள்: 22.01.2021**

**(ஒம்) திரு.க.கதிர்வேல்**
**ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்**
**பவானி நகராட்சி**

வருகின்ற 2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)
பவானி நகராட்சி

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி - 2021-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. அரசாணை எண்.368, நிதித்துறை (SFC-MC) நாள்:07.10.2020 தெரிவித்துள்ளதற்கிணங்க பவானி நகராட்சி அனைத்து வார்டுகளிலும் அடிப்படை வசதிகள் (Basic Amenities) செய்து கொடுக்கும் பொருட்டு கீழ்காணும் பணிகளை தேர்வு செய்து மதிப்பீடு ரூ.33.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீடு வழங்க கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களிடம் பரிந்துரை பெற்று, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலமாக மாநில உயர்மட்ட குழுவிற்கு திட்ட பிரேரணைகள் மற்றும் மதிப்பீடுகளை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, 13 மற்றும் 24 ஆகிய பகுதிகளில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | 7.00 |
| 2 | பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 , 2, 3, 4, 7, 8, 9,10,11, 17, மற்றும் 24 ஆகிய பகுதிகளில் புதியதாக தெருவிளக்கு அமைத்தல் | 8.00 |
| ‘3 | பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, 12, 13, 20, 23, மற்றும் 24 ஆகிய பகுதிகளில் உள்ள பொதுகழிப்பிடங்களை புதுப்பித்தல் | 8.00 |
| 4 | பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 , 3, 4, 5, 6, 7, 10, 12, 13, 15, 16, 20, மற்றும் 27 ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு பகிர்மான குழாய்கள் புதுப்பித்தல் | 7.00 |
| 5 | பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, 4, 7, 14 மற்றும் 24 ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார்கள் புதுப்பித்தல் | 3.00 |
| | மொத்தம் ரூ. | 33.00 |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 0164 /2021/இ1)

3. பவானி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு BSNL நிறுவனத்தின் பிராட் பேண்ட் சேவை 04256 -230410,232462, & 232461 எண்களுக்கு பெறப்பட்டு இணையதளத்தினை பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சியில் அலுவலகம் தொடர்பான பணிகளான இ-மெயில் மூலம் தபால்கள் பதிவிறக்கம் செய்தல் மற்றும் பதில்கள் அனுப்புதல் பி.பி.எல் மற்றும் PMSVANidhi பதிவுகள் இணையதளத்தின் மூலம்

பதிவேற்றுதல் Website - தினந்தோறும் மேற்கொள்ளும் மாற்றங்கள் , வரி வசூல் தொடர்பான அறிக்கைகள் Demand Notice கள் மற்றும் பிற அறிக்கைகள் அனைத்தும் அவ்வப்போது பதிவிறக்கம் செய்தல் TNIUS Module கள் மூலம் நகராட்சிப் பணிகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல், கட்டிட அனுமதி வழங்குதல், தொழில் உரிமம் வழங்குதல் பிறப்பு இறப்பு பதிவுகளில் திருத்தங்கள், பெயர் பதிவுகள் மற்றும் நகல் எடுத்தல் ஆகிய பணிகள் அனைத்தும் இணையதளம் வாயிலாகவே மேற்கொள்ள வேண்டி உள்ளது. மேற்கூறிய நகராட்சிப் பணிகள் அனைத்தும் இணையதளத்தின் வாயிலாகவே மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் தற்போது பயன்பாட்டில் உள்ள இணைப்புகளின் வேகம் குறைவாக இருப்பதாலும் BSNL இணைப்பில் அடிக்கடி இணையதள இணைப்பு துண்டிக்கப்படுவதாலும் பணிகள் தொய்வடையும் நிலை உருவாகிறது. எனவே தற்போது உள்ள பழைய இணைப்புகளின் பிராட்பேண்ட் சேவைகளை துண்டிப்பு செய்து விட்டு BSNL நிறுவனத்திடம் இருந்து மூன்று புதிய OFC இணைய வழி பிராட்பேண்ட் சேவையினை இணைப்பு ஒன்றுக்கு மாதம் ரூ.849/- திட்டத்தின் அடிப்படையில் இணைப்பு பெற்று பயன்படுத்திக் கொள்ளவும் மற்றும் அதற்கு தேவைப்படும் மோடம் 3 எண்கள் கொள்முதல் செய்து பொருத்த ஆகும் செலவுத் தொகை ரூ.7000/- க்கும் மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.026/2021/இ1)

4. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் கோவிட்-19, கொசுக்களின் மூலம் பரவும் டெங்கு, மலேரியா, யானைக்கால் நோய் போன்ற இதர தொற்று நோய்கள் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் மற்றும் விழிப்புணர்வு நோட்டீஸ்கள் அச்சடித் பொது மக்களுக்கு விநியோகிக்க விநியோகிக்க ஏற்கனவே மன்றம் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 08.01.2021-ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் | பிரதிகளின் எண்ணிக்கை | Quoted Rate | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | கொரோனா விழிப்புணர்வு சமூக இடைவெளி அவசியம் குறித்த ஸ்டிக்கர்கள் | 11000 | Rs.1,94,700/- (Inclusive GST) | M/s Kovilpatti Small Scale Industries Service Industrial Co-Operative Society Ltd., Ind. No. Tuti.9, 86 A/7, Muthu Complex, New Road, Kovilpatti - 628 501 |
| | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மட்கும் மற்றும் மட்காத கழிவுகள் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் | 11000 | Rs.1,94,700/- (Inclusive GST) | |
| | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் | 11000 | Rs.86,625/- (Inclusive GST) | |
| | மொத்தம் | | Rs.4,76,025/- (Inclusive | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | GST) | |
| 2 | கொரோனா விழிப்புணர்வு சமூக இடைவெளி அவசியம் குறித்த ஸ்டிக்கர்கள் | 11000 | Rs.2,06,000/- (Inclusive GST) | M/s Arumbakkam Stationaries And Printing Service Industrial Co-Operative Society Ltd., KVI No.2/2017, 24/20, Duraipillai Street, Sri Sakthi Nagar, Arumbakkam,<br>Chennai - 600 106 |
| | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மட்கும் மற்றும் மட்காத கழிவுகள் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் | 11000 | Rs.2,06,000/- (Inclusive GST) | |
| | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ்கள் | 11000 | Rs.88,000/- (Inclusive GST) | |
| | மொத்தம் | | Rs.5,00,000/- (Inclusive GST) | |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Kovilpati Small Scale Industries Service Industrial Co-Operative Society Ltd., Ind. No. Tuti.9, Kovilpatti - 628 501 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். தேவைக்கேற்ப அவ்வப்போது தேவைப்படும் எண்ணிக்கையில் விழிப்புணர்வு பிரதிகள் M/s Kovilpati Small Scale Industries Service Industrial Co-Operative Society Ltd., Ind. No. Tuti.9, Kovilpatti - 628501 அவர்களின் நிறுவனத்தில் அச்சடித்து பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1669/2020/எச்1)

5. பவானி நகராட்சிக்குட்பட்ட இடங்களில் முடித்திருத்தல் / அழகு நிலையம் / ஸ்பா மற்றும் மசாஜ் நிலையம் நடத்துவோர்கள் நகராட்சியால் குறிப்பிட்டுள்ள விண்ணப்பத்தினை பெற்று உரிமம் பெற்று கொள்ளுவது குறித்த அறிவிப்பு தினத்தந்தி மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தினசரி நாளிதழ்களில் 23.12.2020 ஆம் தேதியன்று செய்தி வெளியிடப்பட்டது. மேற்படி, அறிவிப்பு வெளியிடப்பட்டு முப்பது தினங்களுக்குள் யாதொரு ஆட்சேபனைகளோ, கருத்துருக்களோ, நேரிலோ, தபால் மூலமாகவோ பொதுமக்கள் மற்றும் நிலைய உரிமையாளர்களிடமிருந்து இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்திற்கு வைக்கப்படுகிறது. யாதொரு ஆட்சேபனைகளோ, கருத்துருக்களோ வராததால் மேற்குறிப்பிட்ட நிலையங்களுக்கு உரிமம் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. உரிமம் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.1639/2020/எச்1)

6. பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி, திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services Private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். K.DIS No 35508/J3/நாள்: 26.06.2020-ன் வாயிலாக இந்நகராட்சிக்கு கூடுதலாக 60 பணியாளர்களையும், ஏற்கனவே வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது 63 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு அப்பணியாளர்களை கொண்டு நல்லமுறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்தப் பணிக்காலம் எதிர்வரும் 28.02.2021-ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களின் கடிதத்தின் வாயிலாக 28.02.2021-ஆம் தேதியுடன் முடிவடைகின்ற ஒப்பந்த பணியினை மேலும் 01.03.2021 ஆம் தேதி முதல் 31.05.2021-ஆம் தேதி வரையிலான காலத்திற்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2016, நாள்: 29.11.2019ல் குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions-க்கு உட்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.612/- என்னும் விலைவிகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து சம்மதக் கடிதம் இந்நகராட்சிக்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) வாயிலாக 100 சதவீதம் குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து 100 சதவீதம் அறிவியல் முறைப்படி Final Disposal செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு தற்போது இந்நகராட்சியில் மேற்குறிப்பிட்டவாறு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது கோவிட்-19 வைரஸ் நோயினை கட்டுப்படுத்திட அரசால் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு உத்திரவு (Lockdown period) பிறப்பிக்கப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் (COVID – 19 Preventive Measures on War Putting Manner) மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நகரின் சுகாதாரப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகிறது. டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் நகரில் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணிகளை திறம்பட மேற்கொண்டு நகரின் சுகாதாரத்தினை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பொறுப்பாகும் என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படி சுகாதார பணிக்கான ஒப்பந்தகாலத்தை 01.03.2021 ஆம் தேதி முதல் 31.05.2021-ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 35.50 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2255/2016/எச்1)

7. பவானி நகராட்சி - சிறப்பு சாலைகள் திட்டம் ( SRP 2020-21) ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்வதற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை - சென்னை ஆணை எண்.4805/ ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் 2020 நாள்: 21.12.2020-ன்படி தினமணி - தமிழ் & பிசினஸ் ஸ்டாண்டர்டு - ஆங்கிலம் இரண்டு நாள் இதழ்களில் 22.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்த m/s பிரைட் அட்வர்டைசிஸ்ங் No.13 மோர்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006 அவர்களுக்கு விளம்பர கட்டணம் ரூ.40,792.00 தொகை வழங்க செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.1359/2020/இ1)

8. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பணிகளுக்கு விழிப்புணர்வு விளம்பர ப்ளக்ஸ் போர்டுகள் தயார் செய்து பொது மக்கள் அறியும் வண்ணம் அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண். 240 , நாள்: 30.11.2021-ல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 27.01.2021-ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளியாளரின் விபரம் | விலைப்புள்ளி விலைவிகிதம் சதுரடி ஒன்றிற்கு இருபுறமும் ரீப்பர் அடித்து தயார் செய்ய |
|---|---|---|
| 1 | S. பாலசுப்ரமணியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>43, பழனிபுரம் 3வது வீதி,<br>பவானி. | ரூ.31/- |
| 2 | A.ரவிக்குமார்,<br>601, மேட்டூர் ரோடு,பவானி. | ரூ.29/- |
| 3 | R.மணிகண்டன்<br>VPV Plaza,<br>வர்ணபுரம் 5வது வீதி,<br>பவானி | ரூ.33/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்திட்ட A.ரவிக்குமார், 601, மேட்டூர் ரோடு, பவானி அவர்களின் விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பொது/ சமுதாய கழிவறைகள் சம்மந்தமாக பொதுமக்களிடையே ஆண்கள் கழிவறை/ பெண்கள் கழிவறை, கழிவறை செல்லும் வழி, சிறந்த பொது / சமுதாய கழிப்பிடங்கள், வெற்றியின் ஆதாரம் சுகாதாரமான கழிவறை, கழிவறை செயல்படும் நேரம் போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ப்ளக்ஸ் போர்டுகள் தயார் செய்து கழிவறைகளில் அமைக்கவும், அதற்காகும் செலவினம் ரூ.25,000/-ற்கு ஏற்கனவே மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்நிலையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF+ தரச்சான்று பெறுவதற்கு தேவைப்படும் விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகளை தயார் செய்து கழிவறைகளில் அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஏற்கனவே, ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாக ரூ.5000/- செலவிடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.359/2021/எச்1)

9. இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் உருவாகும் கழிவுகளை வீடுவீடாக சென்று தரம்பிரித்து சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள், இரப்பர் தோல்பொருட்கள், உடைந்த மரக்கட்டைகள், உடைந்த மரச்சாமான்கள், பழைய மிதியடிகள், மற்றும் இதர எரியும் தன்மையுடைய கழிவுகளை முறைப்படி அப்புறப்படுத்திட இன்ஸ்னிரேட்டர் வசதி இந்நகராட்சியில் இல்லாததால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கழிவுகளை M/s Ultratech Cements, Ariyalur, M/s Dalmia Cements, Dalmiapuram மற்றும் M/s Mak India Ltd., Erode அவர்களுக்கும் அவ்வப்போது ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த தேவையான JCB வாகனம் மற்றும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை வாடகைக்கு அமர்த்தும் முறையில் ஈடுபடுத்தி கழிவுகளை கொண்டு சென்று இறுதியாக்கம் (Final Disposal Of Combustibles Wastes) செய்து அப்புறப்படுத்த ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052 அவர்களிடம் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகள் பெறப்பட்டு கழிவுகள் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052 அவர்கள் தங்களது கடிதத்தில் ஏற்கனவே, இப்பணிக்கு வாகனங்களை வழங்கும் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் தொடர்ந்து 31.05.2021ஆம் தேதி வரை வாகனங்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இந்நிலையில் கொரோனா நோய் தொற்று கட்டுப்படுத்திட ஊரடங்கு உத்திரவு நடைமுறையில் இருந்த காரணத்தினால் கடந்த மார்ச் 2020 முதல் சிமெண்ட் ஆலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பெற்றுகொள்ளாத காரணத்தினால் தேக்கமடைந்துள்ள அனைத்து எரியும் தன்மையுடைய கழிவுகளையும் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளையும் பொது சுகாதாரப் பணியின் அவசியம் கருதி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி இறுதியாக்கம் செய்திட இந்நிறுவனம் ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்திலேயே தொடர்ந்து பணி மேற்கொள்ள ஏதுவாக M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052 அவர்களிடமிருந்து வாகனங்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்று 31.05.2021-ஆம் தேதி வரை பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00/- இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1628/2019/எச்1)

10. பவானி நகராட்சி அலுவலகத்திற்கு BSNL நிறுவனத்திடமிருந்து மூன்று புதிய OFC இணைய வழி பிராட்பேண்ட் சேவை இணைப்புக்கு மோடம் 3 எண்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு தொகை ரூ.7000/- க்கு தனி அலுவலர் அவர்கள் நாள்: 18.01.2021 -ல் முன் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 21.01.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.C.P. Subramanian (Sri SabariCable )<br>Anna nagar, Bhavani | ரூ.2200/-each |
| 2 | திருவாளர் Amman cable Network Varadhanallur pt, Bhavani. | ரூ.2300/-each |
| 3 | திருவாளர் Jai Ragavendra cables Varnapuram 5th stree, Bhavani | ரூ.2400/-each |

அலுவலக குறிப்பு:
வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.A.C.P. Subramanian (Sri SabariCable )
அவர்கள் ரூ.2200/- க்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.

(ந..க.எண்.026/2021/இ1)

11. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தி வரும் மினி பவர் பம்புகள், பவர் பம்புகள் மற்றும் பொது கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தும் ஏர்கம்பரசர்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 2021-22 ஆம் நிதி ஆண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 002/2021/இ1)

12. பவானி நகராட்சி அனைத்து நகரபகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யக் கூடிய தலைமை நீரேற்று நிலையத்தில் Gas Chlorination Plant அமைக்கப்பட்டு Chlorination செய்யப்பட்டு பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, 2021-22ஆம் நிதியாண்டிற்கு Chlorination பணிக்கு அவ்வப்பொழுது தேவைப்படும் சமயங்களில் Gas Chlorination சிலிண்டர்கள் வாங்கி பயன்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சித்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதி 2021-22ஆம் ஆண்டு நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 051/2021/இ1)

13. பவானி நகராட்சி அலுவலகத்தில் பழுதுபட்டுள்ள Inverter மற்றும் Battery கள் மாற்றுதல் மற்றும் Solar Panal க்கு Volt Controller புதியதாக பொருத்துதல் பணிக்கு மதிப்பீடு ரூ.85,000ற்கு நகர் மன்ற தீர்மானஎண்: 244 நாள் 31/12/2020, அனுமதி அளித்துள்ளதின் பேரில் 27/01/2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|
| 1. | திருவாளர் குரு எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், ஈரோடு | 0.29 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் ஸ்ரீ வேல் எலக்ட்ரிக்கல்ஸ், ஈரோடு. | 1.17 % மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.29 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் குரு எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1528/2020/E1)

14. பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அம்மா உணவகம் அருகில் உள்ள மின் கம்பத்தில் பழுதுபட்டுள்ள T5 96W பிட்டிங்களை 90 W LED பிட்டிங்களாக மாற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.35,000ற்கு நகர் மன்ற தீர்மான எண்: 245, நாள்.31/12/2020, அனுமதி அளித்துள்ளதின் பேரில் 27/01/2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|
| 1. | திருவாளர் SPN Traders, கோனாங்கிபட்டி | 0.85 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் கொங்கு இன்ஜினியரிங், ஈரோடு | 3.43 % மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.85 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் SPN Traders, கோனாங்கிபட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1589/2020/E1)

15. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய திட்டத்தின் Clariflourlator ன் Rubber Wheel மற்றும் புதிய திட்டத்தின் Flax mixer gear box ஆகியவைகள் பழுதுபார்த்தல் பண மதிப்பீடு ரூ.75,000ற்கு நகர் மன்ற தீர்மானஎண்: 243 நாள்.31/12/2020, அனுமதி அளித்துள்ளதின் பேரில் 27/01/2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் /குறைவு |
|---|---|---|
| 1. | திருவாளர் குரு எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், ஈரோடு | 0.40 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் ஸ்ரீ வேல் எலக்ட்ரிக்கல்ஸ், ஈரோடு. | 1.60 % மதிப்பிட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.40 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் குரு எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1528/2020/இ1)

16. பவானி நகராட்சி அனைத்து நகர பகுதிகளுக்கு குடிநிர் விநியோகம் செய்யக்கூடிய தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்ய பயன்படுத்தி வரும் படிகாரம் பயன்படுத்தி பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, 2021-22 ஆம் நிதியாண்டிற்கு படிகாரம் 12 மெ.டன் கொள்முதல் செய்ய ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதி 2021-22 ஆம் ஆண்டு நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1573/2020/E1)

இடம்: பவானி

நாள்: 29.01.2021

(ஒம்) திரு.க.கதிர்வேல்
ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்
பவானி நகராட்சி

**பவானி நகராட்சி**

**22.01.2021 ந் தேதி நகர்மன்ற கூட்ட தீர்மான உண்மை நகல்**

1) நகர்மன்ற தீர்மான எண்.01 /நாள்.22.01.2021

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

2) நகர்மன்ற தீர்மான எண்.02 /நாள்.22.01.2021

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்.) க.கதிர்வேல்,
தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்(பொ)

//உண்மை நகல்//

ஆணையாளர்(பொ)
பவானி நகராட்சி

# பவானி நகராட்சி

## 29.01.2021 ந் தேதி நகர்மன்ற கூட்ட தீர்மான உண்மை நகல்

1) நகர்மன்ற தீர்மான எண்.03 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

2) நகர்மன்ற தீர்மான எண்.04 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

3) நகர்மன்ற தீர்மான எண்.05 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

4) நகர்மன்ற தீர்மான எண்.06 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

5) நகர்மன்ற தீர்மான எண்.07 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

6) நகர்மன்ற தீர்மான எண்.08 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

7) நகர்மன்ற தீர்மான எண்.09 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

8) நகர்மன்ற தீர்மான எண்.10 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

9) நகர்மன்ற தீர்மான எண்.11 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

10) நகர்மன்ற தீர்மான எண்.12 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

11) நகர்மன்ற தீர்மான எண்.13 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

12) நகர்மன்ற தீர்மான எண்.14 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

13) நகர்மன்ற தீர்மான எண்.15 /நாள்.29.01.2021

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

14) நகர்மன்ற தீர்மான எண்.16 /நாள்.29.01.2021

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

15) நகர்மன்ற தீர்மான எண்.17 /நாள்.29.01.2021

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

16) நகர்மன்ற தீர்மான எண்.18 /நாள்.29.01.2021

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்.) க.கதிர்வேல்,**
**தனிஅலுவலர் மற்றும்**
**ஆணையாளர்(பொ)**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்(பொ)**
**பவானி நகராட்சி**